தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார். அவர்களின் மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கையெய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்)

2. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள். வினா எண் 101, டாக்டர் எஸ். சுந்தரராஜ்; மாண்புமிகு நிதியமைச்சர்.

101--

பரமக்குடி நகராட்சியில் வாக்குச் சாவடிகளைப் பிரித்து அமைத்தல்

***20401–டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி நகராட்சியில் மேலமுஸ்லீம் நடுநிலைப்பள்ளியில் 10 வாக்குச் சாவடிகள் ஒரே இடத்தில் இருப்பதால் அவற்றில் 4 வாக்குச் சாவடிகளை யாதவா நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்டம் 200-பரமக்குடி (தனி) சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமக்குடி நகராட்சியில் ஹைராத்துல் அலியா மேலமுஸ்லீம் நடுநிலைப்பள்ளியில் உள்ள 10 வாக்குச் சாவடிகளில் 4 வாக்குச் சாவடிகளை (வாக்குச்சாவடி எண்கள்

1993 டிசம்பர் 31] [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

16 (ஆண்கள்), 16 (பெண்கள்), 18 (ஆண்கள்) மற்றும் *18 (பெண்கள்)* ஆர். சி. யாதவர் நடுநிலைப்பள்ளிக்கு மாற்றுவதற்கான செயற்குறிப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்துள்ளார். அவைகள் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனில் அக்கறையோடு வாக்குச்சாவடிகளைப் பிரித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் பரமக்குடி நகர வாக்காள மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தச் செயற்குறிப்பின்மீது விரைவில் ஒப்புதல்பெற, அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10.05*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று, ஒரு குறிப்பிட்ட பள்ளியில் *10* வாக்குச்சாவடிகளை ஒன்றாக இணைத்திருப்பதன் காரணமாக, *10, 291* வாக்காளர்கள் அங்கு வாக்குப் பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது. அதன் காரணமாக இடநெருக்கடி ஏற்பட்டது மட்டுமல்லாமல் அங்கே பல்வேறு சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்பட இருந்தது. ஆகவேதான், அவற்றை இரண்டாகப் பிரித்து விடுவது நல்லது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் யோசனை சொல்லியிருக்கிறார்கள். தீவிர முறையில் திருத்தப்பட்ட புதிய வாக்காளர்கள் பட்டியலின் அடிப்படையில் சில வழிமுறைகளைப் பின்பற்றி தமிழ்நாட்டில் உள்ள வாக்குச்சாவடிகளை ஆய்வு செய்து ஆணையம் எந்த எந்த வாக்குச் சாவடிகளை, எங்கெங்கே அமைக்கலாம் என்பதைத் திட்டவட்டமாகக் கூறும்படியாக மாநில அரசிடம் கேட்டுள்ளது. அதன்படி நூற்றுக்கு நூறு சதவிகிதம் அளவு வாக்குச் சாவடிகளையெல்லாம் மீண்டும் ஆராய்ந்து அறிக்கை அனுப்பி வைக்குமாறு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். அந்தத் தன்மையின் அடிப்படையில்தான் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பரமக்குடியில் உள்ள *10* வாக்குச்சாவடிகளில் *4* வாக்குச் சாவடிகளை ஆர். சி. யாதவர் நடுநிலைப் பள்ளிக்கு மாற்றலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை அரசு ஏற்று, தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறது. தேர்தல் ஆணையத்தின் பரிசீலனை முடிந்த பிறகு அதற்கான தக்க ஒப்புதல் அரசுக்குக் கிடைக்கும். கிடைத்த உடனே அதன் பேரிலே அரசு நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதுபோன்ற பிரச்சினைகள் எல்லாம் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில்தான் இருக்கின்றன. ஆகவே, மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் இதுபோன்று ஒரே இடத்தில் இருக்கின்ற ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகளைப் பிரிக்கும் எண்ணம் அரசின் தீவிர நடவடிக்கையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலே குறிப்பிட்டேன். நூற்றுக்கு நூறு எல்லா வாக்குச் சாவடிகளையும் பொறுத்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையம் கேட்டு இருக்கிறது. ஆகவேதான் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வாக்குச் சாவடிகளின் அமைப்பு முறை சரியாக இருக்கிறதா இல்லையா; அதிலே ஏதாவது மாற்றம் ஏற்படுத்த வேண்டியது அவசியமா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில் வருகின்ற அறிக்கையை வைத்து தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். அந்த முறையில்தான் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 102. திரு. இரா. அப்புநடேசன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

102--

குலசேகரத்தில் சார்பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

19472–**திரு. இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவட்டார் தொகுதியில் குலசேகரத்தில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) எழவில்லை.